இன்று புதுமைப் பெண் திட்ட விரிவாக்கம் தொடக்க விழா

தூத்துக்குடி, டிச.29: தூத்துக்குடியில் புதுமைப் பெண் விரிவாக்கத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள் கிழமை (டிச.30) தொடங்கிவைக்கிறார்.

புதுமைப் பெண் திட்டம் அரசுப் பள்ளிகளில் படித்துள்ள மாணவிகளுக்கு மட்டுமல்லாமல், அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்று உயர் கல்வியில் சேரும் மாணவிகளுக்கும் மாதம் ரூ.1,000 வழங்கும் வகையில் தற்போது விரிவுபடுத்தப்படுகிறது. இத்திட்ட தொடக்க விழா தூத்துக்குடி காமராஜ் கல்லூரியில் திங்கள்கிழமை (டிச.30) காலை 10 மணிக்கு நடைபெறுகிறது. இதில், முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று, புதுமைப்பெண் திட்டத்தின் விரிவாக்கப் பணிகளைத் தொடங்கி வைக்கிறார்.

இதன்மூலம், தமிழகம் முழுவதும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர்கல்வியில் சேர்ந்துள்ள 75,028 மாணவியர் பயனடைவர். தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் 4,680 மாணவியர் பயனடைவர். இத்திட்டம் பெண்கள் உயர்கல்வி கற்க தூண்டுகோலாக இருக்கும் என கல்வியாளர்கள் தெரிவித்தனர்.

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு

மாணவர்கள் பட்டியலில் திருத்தம் செய்ய இறுதி வாய்ப்பு

சென்னை,டிச.29: பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதவுள்ள மாணவர்களின் தேர்வெண்ணுடன் கூடிய பட்டியலில் திருத்தம் செய்ய ஜன. 2- வரை வாய்ப்பு அளிக்கப்படுவதாக தேர்வுத் துறை இயக்குநர் ந.லதா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கை விவரம்: தமிழகத்தில் நடப்பு கல்வியாண்டில் (2024-25) பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதவுள்ள மாணவர்களின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப் பட்டியல் கடந்த டிச.24ஆம் தேதி வெளியிடப்பட்டது. இந்த பட்டியலில் விடுபட்ட மாணவர்களை சேர்க்கவும், இறப்பு மற்றும் மாற்றுச் சான்றிதழ் பெற்ற மாணவர்களை நீக்கவும் இறுதி வாய்ப்பு தற்போது வழங்கப்படுகிறது.

இதையடுத்து அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் முதல்வர்களும் பட்டியலில் திருத்தங்கள் இருப்பின் அதன் விவரங்களை ஜன. 2 ஆம் தேதிக்குள் சரிசெய்ய வேண்டும். அதேநேரம் இறப்பு மற்றும் மாற்றுச் சான்றிதழ் பெற்ற மாணவர்கள் பெயர்களை மட்டும் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும்.

நீண்ட விடுப்பில் உள்ள மாணவர்களின் பெயர்களை எக்காரணம் கொண்டும் தன்னிச்சையாக நீக்கக்கூடாது. மேலும் மாவட்டக் கல்வி அலுவலர்களின் அனுமதி பெற்ற பின்னரே அத்தகைய மாணவர்களை இறுதி பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய வேண்டும். இதற்கான அறிவுறுத்தல்களை சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் வழங்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

19 ஐபிஎஸ் அதிகாரிகள் பதவி உயர்வுடன் பணியிட மாற்றம்

சென்னை, டிச. 29: தமிழக காவல் துறையில் 19 ஐபிஎஸ் அதிகாரிகள் பதவி உயர்த்தப்பட்டு, பணியிட மாற்றம் செய்யப்பட்டனர்.

இது தொடர்பாக தமிழக உள்துறை கூடுதல் தலைமைச் செயலர் தீரஜ்குமார் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட உத்தரவு (பழைய பதவி அடைப்புக் குறிக்குள்):

1. மகேஷ்குமார் அகர்வால்-ஆயுதப் படை சிறப்பு டிஜிபி (ஆயுதப் படை ஏடிஜிபி)
2. ஜி.வெங்கட்ராமன்-நிர்வாகப் பிரிவு சிறப்பு டிஜிபி (நிர்வாகப் பிரிவு ஏடிஜிபி)
3. வினித்தேவ் வான்கடே-தலைமையிட சிறப்பு டிஜிபி (தலைமையிட ஏடிஜிபி)
4. சஞ்சய் மாத்தூர்-டிஜிபி மத்திய அரசுப் பணி (என்சிஆர்பி ஏடிஜிபி)
5. ஆர்.தினகரன்-செயலாக்கப் பிரிவு ஏடிஜிபி (சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவு ஐஜி)
6. சோனல் வி.மிஸ்ரா-ஏடிஜிபி மத்திய அரசுப் பணி (சிஆர்பிஎஃப் ஐஜி)
7. ஏ.சரவணசுந்தர்-கோவை மாநகர காவல் ஆணையர் (கோவை சரக டிஐஜி)
8. பிரவேஷ்குமார்-சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவு ஐஜி (சென்னை காவல் துறை வடக்கு மண்டல இணை ஆணையர்)
9. ஏ.கயல்விழி-பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்புப் பிரிவு ஐஜி (சென்னை காவல்துறை தலைமையிட இணை ஆணையர்)
10. எஸ்.சேவியர் தன்ராஜ்-ஐஜி மத்திய அரசுப் பணி (டிஐஜி மத்திய அரசுப் பணி)
11. அனில்குமார் கிரி-ஐஜி மத்திய அரசுப் பணி (டிஐஜி மத்திய அரசுப் பணி)
12. நிஷா பார்த்திபன்-ஐஜி மத்திய அரசுப் பணி (டிஐஜி மத்திய உளவுத் துறை)
13. முரளி ரம்பா-ஐஜி மத்திய அரசுப் பணி (தலைமையிட டிஐஜி, சிபிஐ)
14. வி.வருண்குமார்-திருச்சி சரக டிஐஜி (திருச்சி காவல் கண்காணிப்பாளர்)
15. சந்தோஷ் ஹதிமானி-திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் (சென்னை காவல் துறை திருவல்லிக்கேணி காவல் துணையர்)
16. பண்டி கங்காதர்-சென்னை காவல் துறை போக்குவரத்துப் பிரிவு தெற்கு இணை ஆணையர் (சென்னை காவல் துறை போக்குவரத்துப் பிரிவு தெற்கு துணை ஆணையர்)
17. வி.சசிமோகன்-கோயம்புத்தூர் சரக டிஐஜி (ஈரோடு சிறப்பு அதிரடிப்படை எஸ்பி)
18. வந்திதா பாண்டே-திண்டுக்கல் சரக டிஐஜி (புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர்)
19. பகேர்லா செபாஸ் கல்யாண்-சென்னை பெருநகர காவல் துறை மேற்கு மண்டல இணை ஆணையர் (பொருளாதார குற்றப் பிரிவு எஸ்பி).

முட்டை விலை ரூ.5.30

நாமக்கல், டிச. 29: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை மாற்றமின்றி ரூ. 5.30-ஆக நீடிக்கிறது.

தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் மண்டல ஆலோசனைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில், முட்டை விலை நிலவரம் குறித்து பண்ணையாளர்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டன. இதில், மற்ற மண்டலங்களில் விலையில் மாற்றம் ஏதும் செய்யப்படாததால், இங்கும் விலையில் மாற்றம் வேண்டாம் என தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து, முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை மாற்றமின்றி ரூ. 5.30-ஆக ஒருங்கிணைப்புக் குழுவால் அறிவிக்கப்பட்டது.

பல்லடத்தில் நடைபெற்ற தேசிய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், கறிக்கோழி கிலோ ரூ.98-ஆகவும், முட்டைக்கோழி கிலோ ரூ.83 -ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டது.

பாரதம் என்பது இந்தியாவைவிடப் பெரியது

நாகாலாந்து ஆளுநர் இல.கணேசன்

ஈரோடு, டிச. 29: பாரதம் என்பது இந்தியாவை விடப் பெரியது. ஆப்கானிஸ்தான், நேபாளம், திபெத், இலங்கை ஆகிய நாடுகள் பாரதத்தின் பகுதிகள் என நாகாலாந்து ஆளுநர் இல.கணேசன் பேசினார்.

ஈரோட்டில் பாரத தர்ஷன் குடும்ப சங்கம விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் நாகாலாந்து மாநில ஆளுநர் இல.கணேசன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுப் பேசியதாவது: முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியுடன் நேபாளம் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது அங்கு முழுக்க முழுக்க ஹிந்து வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பதைப் பார்க்க முடிந்தது. அங்கு ஜனக்புர் (சீதா தேவி பிறந்த ஊர்) சென்றோம். அப்போது எவரெஸ்ட் சிகரம், கைலாச மலை உள்ளிட்ட நான்கு பகுதிகளைப் பார்த்தோம்.

நாகாலாந்தில் சுதந்திரத்துக்காக போராடிய மலை வாழ் பெண் ராணி கெய்டின்லியு பிறந்துள்ளார். நாகாலாந்து மக்கள் 99 விழுக்காடு கிறிஸ்தவ மதத்துக்கு மாறிவிட்டனர். ஒரு விழுக்காடு மக்கள் கிறிஸ்தவ மதத்துக்கு மாறாததற்குக் காரணம் ராணி கெய்டின்லியு. அவர் ஆங்கிலேயரை மட்டுமல்லாமல், அவர்களின் கிறிஸ்தவ மதத்தையும் எதிர்த்தார்.

பாரதம் என்பது இந்தியாவை விடப் பெரியது. இந்தியா மட்டும் பாரதம் அல்ல. ஆப்கானிஸ்தான், நேபாளம், திபெத், இலங்கை ஆகிய நாடுகள் பாரதத்தின் பகுதிகள். கலாசார ரீதியில் பயணம் மேற்கொள்ள வேண்டிய பகுதிகளாக இவை உள்ளன. பாரத தர்ஷன் யாத்திரை மேற்கொள்வது மகிழ்ச்சி அளிக்கிறது. குலதெய்வம் என்பது பெண் தெய்வம்தான். ஆண்டுக்கு ஒருமுறையாவது குலதெய்வ கோயிலுக்குச் சென்று வர வேண்டும் என்றார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் இல.கணேசன் கூறியதாவது: பாரத நாட்டின் ஒற்றுமையை அறிவுபூர்வமாக மட்டுமின்றி அனுபவரீதியாக புரிந்து கொள்ள வேண்டும். நாட்டின் முக்கியப் பகுதிகளைப் பார்வையிட்டு, மக்களைச் சந்தித்து அனுபவரீதியாக ஒரே நாடு என்கிற உணர்வு மக்களுக்கு ஏற்படவேண்டும் என்று பாரத தர்ஷன் நிகழ்ச்சி நடக்கிறது. இதற்கு வலுவூட்ட சில கருத்துகளைத் தெரிவித்துள்ளேன்.

நாகாலாந்தில் ஆளுநர் பணி நன்றாக உள்ளது. ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு விஷயம் வேறுபடும். பத்திரிகையில் செய்தி வரும்போதுதான் அங்கு பிரச்னை உள்ளது என்று தெரிய வரும். நாகாலாந்து அமைதியான மாநிலமாக செயல்பட்டு வருகிறது என்றார்.

அண்ணாமலை சாட்டையால் அடித்துக்கொண்டது குறித்த கேள்விக்கு பதில் அளித்த அவர், அண்ணாமலை பாஜக, நான் தற்போது பாஜகவில் இல்லை என்றார்.

விழாவில் மொடக்குறிச்சி எம்எல்ஏ சி.சரஸ்வதி மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்றனர்.

பாரத தர்ஷன் குடும்ப சங்கம விழாவில் பேசுகிறார் நாகாலாந்து மாநில ஆளுநர் இல.கணேசன்.

44 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம்

சென்னை, டிச. 29: தமிழக காவல் துறையில் 44 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக தமிழக அரசின் உள்துறை கூடுதல் தலைமைச் செயலர் தீரஜ்குமார் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட உத்தரவு (அடைப்புக்குறிக்குள் முந்தைய பதவி):

1. டி.கல்பனா நாயக்-சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவு ஏடிஜிபி (தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரிய ஏடிஜிபி)
2. கே.பவானீஸ்வரி-ஆவடி மாநகர காவல் துறை தலைமையிடம் மற்றும் போக்குவரத்து கூடுதல் ஆணையர் (தனிப் பிரிவு ஐஜி)
3. வி.பாலகிருஷ்ணன்-நிர்வாகப் பிரிவு ஐஜி (கோவை மாநகர காவல் துறை ஆணையர்)
4. ஜி.கார்த்திகேயன்-மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஐஜி (மத்திய மண்டல ஐஜி)
5. வி.ஜெயஸ்ரீ-ஊர்க்காவல்படை ஐஜி (செயலாக்கப் பிரிவு ஐஜி)
6. ஏ.ஜி.பாபு-சென்னை ரயில்வே காவல் துறை ஐஜி (தொழில்நுட்பப் பிரிவு ஐஜி)
7. என்.எம்.மயில்வாகனன்-ஈரோடு சிறப்பு அதிரடிப் படை ஐஜி (மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஐஜி)
8. கே.ஜோஷி நிர்மல்குமார்-மத்திய மண்டல ஐஜி (சிவில் சப்ளை சிஐடி ஐஜி)
9. எஸ்.லட்சுமி- தனிப் பிரிவு ஐஜி (திருப்பூர் மாநகர காவல் துறை ஆணையர்)
10. எஸ்.ராஜேந்திரன்-திருப்பூர் மாநகர காவல் துறை ஆணையர் (ஆவடி மாநகர காவல் துறை தலைமையிடம் மற்றும் போக்குவரத்துப் பிரிவு கூடுதல் ஆணையர்)
11. ரூபேஷ்குமார் மீனா-சிவில் சப்ளை சிஐடி ஐஜி (திருநெல்வேலி மாநகர காவல் துறை ஆணையர்)
12. சரோஜ் குமார் தாகூர்-சென்னை காவல் துறை தலைமையிட இணை ஆணையர் (சென்னை காவல் துறை கிழக்கு மண்டல இணை ஆணையர்)
13. பி.விஜயகுமார்-சென்னை காவல் துறை கிழக்கு மண்டல இணை ஆணையர் (சென்னை காவல் துறை மேற்கு மண்டல இணை ஆணையர்)
14. டி.மகேஷ்குமார்-சென்னை காவல் துறை போக்குவரத்துப் பிரிவு வடக்கு இணை ஆணையர் (சென்னை காவல் துறை போக்குவரத்துப் பிரிவு தெற்கு இணை ஆணையர்)
15. எம்.மனோகர்-சென்னை காவல் துறை வடக்கு மண்டல இணை ஆணையர் (திருச்சி சரக டிஐஜி)
16. ஜெயச்சந்திரன்-சென்னை காவல் துறை திருவல்லிக்கேணி துணை ஆணையர் (சென்னை காவல் துறை மத்திய குற்றப் பிரிவு துணை ஆணையர்-1)
17. வி.அன்பு-ஈரோடு சிறப்பு அதிரடிப்படை எஸ்பி (ஆவடி மாநகர காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவு துணை ஆணையர்)
18. தீபக் சிவாச்-அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்)
19. ஆர்.ராஜாராம்-தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்)
20. கிரண் ஸ்ருதி-தீவிரவாத தடுப்பு படை தலைமையிட எஸ்பி (ராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர்)
21. அபிஷேக் குப்தா-புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்)
22. யாதவ் கிரிஷ் அசோக்-திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (திருப்பூர் மாநகர காவல் துறை தெற்கு துணை ஆணையர்)
23. ஆர்.ஸ்டாலின்-கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (கோவை மாநகர காவல் துறை வடக்கு துணை ஆணையர்)
24. ஆர்.சரவணகுமார்-பொருளாதார குற்றப் பிரிவு தெற்கு மண்டல எஸ்பி (கோவை மாநகர காவல் துறை தெற்கு துணை ஆணையர்)
25. எஸ்.செல்வராஜ்-சென்னை காவல் துறை மத்திய குற்றப் பிரிவு-1 துணை ஆணையர் (அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்)
26. ஆஷிஷ் ராவத்-சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்)
27. எஸ்.ஜெயக்குமார்-கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்)
28. விவேகானந்தா சுக்லா-ராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (திருச்சி மாநகர காவல் துறை வடக்கு துணை ஆணையர்)
29. எஸ்.செல்வகுமார்-மதுரை சிவில் சப்ளை சிஐடி எஸ்பி (திருச்சி மாநகர காவல் துறை தெற்கு துணை ஆணையர்)
30. எஸ்.அரவிந்த்-தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (திருச்சி மாநகர காவல் துறை தலைமையிட துணை ஆணையர்)
31. வி.ஆர்.சீனிவாசன்-சென்னை காவல் துறை பரங்கிமலை துணை ஆணையர் (தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர்)
32. எஸ்.செல்வநாகரத்தினம்-திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (சென்னை காவல் துறை பரங்கிமலை துணை ஆணையர்)
33. டோங்ரே பிரவீண் உமேஷ்-ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு மேற்கு சரக எஸ்பி (சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர்)
34. இ.சுந்தரவதனம்-க்யூ பிரிவு எஸ்பி (கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர்)
35. கரட் கருண் உத்தவ்ராவ்-திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (மதுரை மாநகர காவல் துறை தெற்கு துணை ஆணையர்)
36. மதுகுமாரி-தமிழ்நாடு சிறப்புப் படை மதுரை 6-ஆவது அணி கமாண்டன்ட் (மதுரை மாநகர காவல் துறை வடக்கு துணை ஆணையர்)
37. ஜி.எஸ்.அனிதா-மதுரை மாநகர காவல் துறை வடக்கு துணை ஆணையர் (திருநெல்வேலி மாநகர காவல் துறை தலைமையிட துணை ஆணையர்)
38. பி.சரவணன்-விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (ஒருங்கிணைந்த குற்றப் புலனாய்வு பிரிவு எஸ்பி)
39. டி.ஈஸ்வரன்-திருச்சி மாநகர காவல் துறை தெற்கு துணை ஆணையர் (சைபர் குற்றப் பிரிவு எஸ்பி-3)
40. ஏ.ஜி.இனிகோ திவ்யன்-மதுரை மாநகர காவல் துறை தெற்கு துணை ஆணையர் (மதுரை சிவில் சப்ளை சிஐடி எஸ்பி)
41. என்.தேவநாதன்-கோயம்புத்தூர் மாநகர காவல் துறை வடக்கு துணை ஆணையர் (ஊழல் தடுப்புப் பிரிவு மேற்கு சரக எஸ்.பி.)
42. வி.வினோத் சாந்தாராம்-திருநெல்வேலி மாநகர காவல் துறை கிழக்கு துணை ஆணையர் (சிபிசிஐடி எஸ்பி)
43. ஜி.ஷஷாங்சாய்-ஒருங்கிணைந்த குற்றப் புலனாய்வுப் பிரிவு எஸ்பி (க்யூ பிரிவு எஸ்பி)
44. அவினாஷ்குமார்-தொழில் நுட்பப் பிரிவு ஐஜி (நிர்வாகப் பிரிவு ஐஜி).

திருமலையில் ஜனவரி மாத உற்சவங்கள்

திருப்பதி, டிச.29: திருமலையில் 2025 ஜனவரி மாதத்தில் நடைபெறும் உற்சவங்களின் பட்டியலை தேவஸ்தானம் வெளியிட்டுள்ளது.

ஆண்டுக்கு 450 உற்சவங்கள் நடத்தப்படுவதால் திருமலைக்கு நித்திய கல்யாணம் பச்சை தோரணம் என்ற அடைமொழி உள்ளது.

திருமலையில் ஏழுமலையானுக்கும், தாயாருக்கும் மட்டுமல்லாமல் அவர்களின் அடியவர்களின் திருநட்சத்திரம் உள்ளிட்டவையும் நடத்தப்படுகிறது.

அதன்படி ஒவ்வொரு மாதம் தொடங்குவதற்கு முன் திருமலை உற்சவங்களின் பட்டியலை வெளியிட்டு வருகிறது. அதன்படி ஜனவரி 2025-இல் நடைபெறும் உற்சவங்கள் விவரம்:

ஜன. 9: சின்ன சாத்துமுறை.

ஜன. 10: வைகுண்ட ஏகாதசி, தங்கத் தேர் புறப்பாடு, வைகுண்ட வாயில் தரிசனம் ஆரம்பம்.

ஜன. 11: வைகுண்ட துவாதசி, சுவாமி புஷ்கரணியில் சக்கரத்தாழ்வாருக்கு தீர்த்தவாரி.

ஜன.15: பிரணய கலஹோத்ஸவம் மற்றும் கோதா பரிணயம்.

ஜன. 17: திருமழிசை ஆழ்வார் வர்ஷ திரு நட்சத்திரம்.

ஜன. 18: ஸ்ரீ தியாகராஜர் ஆராதனை உற்சவம்.

ஜன. 19: பெரிய சாத்துமுறை, வைகுண்ட வாயில் தரிசனம் நிறைவு.

ஜன. 20: ஸ்ரீ கூரத்தாழ்வார் வர்ஷ திரு நட்சத்திரம்.

ஜன. 23: அத்யயனோற்சவம் நிறைவு.

ஜன. 24: திருமலை நம்பி பிருந்தாவனத்துக்கு மலையப்பசுவாமி எழுந்தருளல்.

ஜன. 25: சர்வ ஏகாதசி.

ஜன. 26: குடியரசு தினம்.

ஜன. 27: மாத சிவராத்திரி.

ஜன. 29: ஸ்ரீ புரந்தர தாச ஆராதனை மகோற்சவம்.

HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்

பதிவு அலுவலகம்: ராதிகா, 2ஆவது தளம், லா கார்டன் சாலை, நவ்ரங்புரா, அகமதாபாத் - 09.
கிளை அலுவலகம்: HDB டவர், பழைய எண் 64, புதிய எண் 84, 'A' பிளாக், கிரீம்ஸ் சாலை, சென்னை-600006.

E-ஏல விற்பனை அறிவிப்பு

(கடன்தாரர் / சுவட்டு விண்ணப்பதாரர் / பொதுமக்கள் ஆகியோருக்கு) (SARFAESI சட்டம் 2002, விதி 8(6) அதனுடன் விதி 9(1) ஆகியவற்றின் கீழ்)

கீழே கையொப்பமிட்டுள்ள **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.,** நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன்படி பின்வரும் சொத்தை **"உள்ளது உள்ள இடத்தில் மற்றும் உள்ளது உள்ளபடி"** எனும் அடிப்படையில் விற்பனை செய்வதற்கான உரிமையுடன் கீழ்க்காணும் கடன் கணக்கில் பேரில் சுவாதீனம் செய்துள்ளார்.

1. விண்ணப்பதாரர் / கூட்டு விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி: 1. சங்கீதபிரியா ,R, எண் 6, சாத்தான் குட்டை தெரு, பெரிய காஞ்சிபுரம் - 631502, தமிழ்நாடு. **இன்னொரு முகவரி:** கதவு எண் 6AB, சாத்தான்குட்டை தெரு, பெரிய காஞ்சிபுரம்-631502. **2. ரவிக்குமார் ,D,** எண் 6, சாத்தான்குட்டை தெரு, பெரிய காஞ்சிபுரம்-631502, தமிழ்நாடு.

கணக்கு எண்: 21318990, மொத்த நிலுவைத் தொகை: 31.12.2024 நாள்படி **ரூ.30,82,287.11/-(ரூபாய் முப்பது இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து இருநூற்று எண்பத்தேழு மற்றும் பைசா பதினொன்று மட்டும்)** அத்துடன் முழுத்தொகை செலுத்தப்படும் நாள் வரையிலான மேல் வட்டி / இடைநிகழ் செலவுகள் / செலவினங்கள் உட்பட.

ஈடு பெற்றுக் கடனளித்தவருக்குத் தெரிந்து ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின் அவற்றின் விவரங்கள்: --- ஏதும் இல்லை

அசையாச் சொத்துக்களின் விவரங்கள்: காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், காஞ்சிபுரம் நகரம், காஞ்சிபுரம் !ஆம் இணை பதிவு அலுவலக வட்டாரம், 4ஆவது பிரிவு, பெரிய காஞ்சிபுரம், சாத்தான்குட்டை தெரு மேற்குப் பக்கம். எல்லைகள் பின்வருமாறு: சாத்தான்குட்டை தெருவுக்கு மேற்கில், சுந்தரமூர்த்தி வீட்டுக்கு வடக்கில், வாய்க்காலின் உப்பேரிகுளம் வழிக்குக் கிழக்கில், குப்புசாமி வீட்டுக்குத் தெற்கில். இவற்றுக்கிடையே உள்ள 3 அடி பொது வழி சேர்த்து அளவு: இருபுறமும் வடக்கிலிருந்து தெற்காக - 19 அடி, இருபுறமும் கிழக்கிலிருந்து மேற்காக - 69 அடி, விதிவிலக்கு கிழக்கே தென்பகுதி ஜீவா, சொக்கலிங்கம், தணிகை அரசு, மேற்குப் பக்கம், இந்தச் சொத்தின் நடுவில் வடக்கிலிருந்து தெற்காக இருபுறமும் – 19 அடி, கிழக்கிலிருந்து மேற்காக இருபுறமும் - 22 அடி, ஆக நிலத்தின் மொத்தப் பரப்பளவு 418 சதுர அடி மற்றும் 592 சதுர அடிப் பரப்பு கொண்ட அங்குள்ள கட்டடம் உட்பட. இத்துடன் பொது வழி, முன்வைப்புத் தொகையுடன் கூடிய மின்சாரவாரிய இணைப்பு (மின்சாரவாரிய சேவை எண் 303-033-120) சேர்த்து. இந்த சொத்தின் வரி ரசீது எண் 64024, வரி ரசீது கதவு எண் 6AB, சாத்தான்குட்டை தெரு, பிரிவு சர்வே எண் 74/1. **எல்லைகள் பின்வருமாறு:** வடக்கு: சுந்தரமூர்த்தி வீடு, தெற்கு: குப்பு நாயக்கர் வீடு, கிழக்கு: தயாளன் ஒப்படைப்பு பாகம், மேற்கு: தணிகை அரசு ஒப்படைப்பு பாகம்.

கடனீட்டுச் சொத்துக்களின் அட்டவணை II: காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், காஞ்சிபுரம் நகரம், காஞ்சிபுரம் !ஆம் இணை பதிவு அலுவலக வட்டாரம், 4ஆவது பிரிவு, பெரிய காஞ்சிபுரம், சாத்தான்குட்டை தெரு மேற்குப் பக்கம். எல்லைகள் பின்வருமாறு: சாத்தான்குட்டை தெருவுக்கு மேற்கில், சுந்தரமூர்த்தி வீட்டுக்கு வடக்கில், வாய்க்காலின் உப்பேரிகுளம் வழிக்குக் கிழக்கில், குப்புசாமி வீட்டுக்குத் தெற்கில். இவற்றுக்கிடையே உள்ள 3 அடி பொது வழி சேர்த்து அளவு: இருபுறமும் வடக்கிலிருந்து தெற்காக - 19 அடி, இருபுறமும் கிழக்கிலிருந்து மேற்காக - 69 அடி, விதிவிலக்கு கிழக்கே தென்பகுதி ஜீவா, சொக்கலிங்கம் பாகம், தயாளன் பாகத்தின் பின்பக்கத்தில் உள்ள நடு பாகம் தவிர்த்து. எல்லைகள் பின்வருமாறு: சொக்கலிங்கம் வீட்டுக்கு மேற்கில், தயாளன் ஒப்படைப்பு பாகத்துக்குக் கிழக்கில், குப்பு நாயக்கர் சொத்துக்குத் தெற்கில், சுந்தரமூர்த்தி நாயக்கர் வீட்டுக்கு வடக்கில். இந்தச் சொத்துக்கிடையே உள்ள சொத்தின் அளவு: வடக்கிலிருந்து தெற்காக இருபுறமும் – 19 அடி, கிழக்கிலிருந்து மேற்காக இருபுறமும் - 22 அடி, ஆக நிலத்தின் மொத்தப் பரப்பளவு 418 சதுர அடி மற்றும் 592 சதுர அடிப் பரப்பு கொண்ட அங்குள்ள கட்டடம் உட்பட. இத்துடன் பொது வழி, முன்வைப்புத் தொகையுடன் கூடிய மின்சாரவாரிய இணைப்பு சேர்த்து. இந்த சொத்தின் வரி ரசீது எண் 64024, வரி ரசீது கதவு எண் 6AB, சாத்தான்குட்டை தெரு, பிரிவு சர்வே எண் 74/2A1. **எல்லைகள் பின்வருமாறு:** வடக்கு: சுந்தரமூர்த்தி வீடு, தெற்கு: குப்பு நாயக்கர் வீடு, கிழக்கு: தயாளன் ஒப்படைப்பு பாகம், மேற்கு: சொக்கலிங்கம் பாகம்.

குறைந்தபட்ச விலை	டேவணித்தொகை (EMD)	ஏல உயர்வுத் தொகை	ஏல நாள் மற்றும் நேரம்	டேவணித்தொகை (EMD) செலுத்தக் கடைசி நாள் மற்றும் நேரம்
ரூ.45,40,729/-	ரூ.4,54,072/-	ரூ.50,000/-	05.02.2025 அன்று முற்பகல் 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை	04.02.2025 அன்று மாலை 04.00 மணி

ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

(1) ஏல விற்பனையானது **'இணைய வழி e-ஏல'** முறையில் **https://www.bankeauctions.com** இணையத்தளத்தில் **அல்லது 'கைபேசி செயலி'** மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாட்களில் எண்ணிக்கை **வரம்பற்ற 5 நிமிடக் கால நீட்டிப்பு வசதியுடன் நடைபெறும்.** **(2)** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் **https://www.bankeauctions.com** இணைய முகப்பில் தங்கள் பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பயன்படுத்தி டேவணித்தொகையைச் செலுத்தலாம் (**https://www.bankeauctions.com** இணையத்தளத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்து பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் இலவசமாகப் பெறலாம்). டேவணித்தொகையைக் குறைந்தபட்ச விலையில் 10% எனும் அளவில் **"HDB Financial Service Limited"** எனும் பெயரிலான செலுத்தாணை (Order) / கேட்பு வரைவோலை (DD) வடிவில் செலுத்த வேண்டும். இணைய முகப்பில் ஏலதாரர் தன்னைப் பதிவு (ஒருமுறை) செய்து கொண்ட பின்பு ஆர்வமுள்ள ஏலதாரர் / வாங்குநர் ஏல ஆவணத்தைத் தாக்கல் செய்தவுற்கான கடைசி நாளுக்கும் நேரத்துக்கும் முன்னதாகப் பின்வரும் ஆவண நகல்களை இணைய முகப்பில் பதிவேற்ற வேண்டும். அவையாவன: i) NEFT/RTGS செலுத்துச்சீட்டு அல்லது கேட்பு வரைவோலை நகல், ii) நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை நகல், iii) அடையாளச் சான்று / முகவரிச் சான்று எனும் வகையில் [வாடிக்கையாளர் விவர ஆவணங்கள் (KYC) எனும் வகையில்] சொந்தக் கையொப்பமிடப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை நகல் / ஓட்டுநர் உரிம நகல் / கடவுச்சீட்டு நகல். இவை இல்லாமல் வரும் ஏலப்புள்ளிகள் தள்ளுபடி செய